# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## (See rule 5 and Serial Number 3 of Appendix - I)
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2011 ஆகஸ்ட் திங்கள் 05.08.2011–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**பொருள் எண். 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் க.எண்.30389/பி2/2011–1 நாள் 12.07.2011–ன்படி இந்நகராட்சிக்கு IDSMT திட்டத்தின்கீழ் ரூ.14,99,065/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியின் மீன் சந்தையானது திறந்த வெளியில் நடைபெற்று வருகிறது. குளச்சல் பகுதி மக்களின் முக்கிய தொழில் மீன்பிடித்தல் ஆகும். தற்போது மத்திய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டும், பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நலன் கருதியும் நவீன வசதியுடன்கூடிய புதிய மீன் சந்தை ஒன்றை மேற்கண்ட IDSMT திட்ட நிதியின் தொகை ரூ. 14,99,065/– போக மீதித் தொகையை ரூ. 5,00,935/– TUFIDCO நிதி உதவியுடன் சேர்த்து மொத்தம் ரூ.20,00,000/– ல் IDSMT திட்டத்தில் நவீன மீன்சந்தை கட்டவும், திட்ட பிரேரணை அனுப்புவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.4805/2011/இ1)

**தீர்மானம் எண்.1690 அலுவலக குறிப்பு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட புனித காணிக்கை மாதா பங்கை சார்ந்த குழந்தை ஏசு நகரில் சுனாமி மறுவாழ்வு குடியிருப்பில் சுமார் 150 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். அக்குடியிருப்பில் வாழும் மக்களுக்கு மறைக்கல்வி கற்பிப்பதற்கு 2006–ம் ஆண்டில் மறைக்கல்விக் கூடம் கட்டப்பட்டு மறைக்கல்வி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. அந்த மறைக்கல்விக் கூடம் கட்டப்பட்டுள்ள இடம் திரு.அந்தோணி அடிமை அவர்கள் மனைவி திருமதி. ராஜாத்தி என்பவருக்கு சொந்தமானது என்பதற்கான ஆதார சம்மத பத்திர நகல் மற்றும் கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் நகர்சார் ஆய்வாளர் (நில அளவை) குளச்சல் நகராட்சி அவர்களின் வரைபட நகல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி குழந்தை ஏசு நகரில் வாழும் சுனாமி மறுவாழ்வு மக்களின் நலன் கருதி அங்குள்ள மறைக்கல்வி கட்டிடத்திற்கு மின்இணைப்பு வழங்க தடையில்லா சான்று வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

(ந.க.எண்.5070/2011/இ1)

**தீர்மானம் எண்.1691 பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்துக்கு மின்இணைப்பு வழங்குவதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்கு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) ஜே. ஜேசையா,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்
குளச்சல் நகராட்சி

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2011 ஆகஸ்ட் திங்கள் 30.08.2011–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

**முன்னிலை:**
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்

**29.07.2011 –ம் தேதிய சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண். 1**

இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.1659 நாள்.29.7.2011–ல் கட்டிட வரைபட அனுமதி கோரி வரும் விண்ணப்பங்களின் மீது திருத்திய கட்டணங்கள் வசூல் செய்வது தொடர்பாக இதர நகராட்சிகளில் அமுலில் உள்ள கட்டண விகிதங்களை அறிந்த பின்னர் அதற்கு ஏற்றவாறான முடிவு செய்வதற்கு வேண்டி ஒத்திவைக்கப்பட்டது. அதன்பேரில் குளச்சல், குழித்துறை மற்றும் பத்மநாபபுரம் நகராட்சிகளில் தற்போது அமுலில் உள்ள கட்டண விகிதங்கள் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ எண். | இனங்கள் | நகராட்சிகளில் தற்போதுள்ள கட்டண விகிதங்கள் (மூன்று வருடத்திற்கு) | | |
|---|---|---|---|---|
| I | **<u>உரிமக்கட்டணம்</u>** | குளச்சல் | குழித்துறை | பத்மநாபபுரம் |
| 1. | கட்டிடம் கட்டுதல் 200 சதுர அடிக்கு | 96 | 200 | 200 |
| 2. | கழிவறை ஒன்றிற்கு | 62 | 50 | 75 |
| 3. | கட்டிடம் கட்டும் இடம் மேற்பார்வைக் கட்டணம். | 27 | 150 | 150 |
| 4. | செப்டிக் டேங்க் | 62 | – | – |
| 5. | கிணறு ஒன்றிற்கு | 22 | 100 | 100 |
| 6. | மதில் சுவர் | 200 | 100 | 1 மீட்டருக்கு ரூ.10/–வீதம் |
| 7. | அபராதக்கட்டணம் | 200 | 500 | 500 |
| 8. | கட்டிடம் கட்டும் இடம் அங்கீகாரம்<br>a).1 ஏர் வரை<br>b).2 ஏர் முதல் 4 ஏர் வரை | <br>36<br>66 | <br>100<br>150 | <br>100<br>150 |
| II | **<u>அபிவிருத்திக் கட்டணம்</u>** | | | |
| 1. | கட்டிடம் கட்டுதல்<br>கட்டிடம் –1 சதுர மீட்டருக்கு<br>(குடியிருப்பு & வணிகம்) | குடியிருப்பு – ரூ. 2.50<br>வணிகம் – ரூ. 2.50 | குடியிருப்பு – ரூ .2.50<br>வணிகம் – ரூ. 5.00 | குடியிருப்பு – ரூ. 3.00<br>வணிகம் – ரூ 6.00 |
| 2. | கட்டிடம் கட்டும் மனை<br>1 சதுர மீட்டருக்கு<br>(குடியிருப்பு & வணிகம்) | குடியிருப்பு ரூ.1.00<br>வணிகம் ரூ. 1.00 | குடியிருப்பு – ரூ. 1.00<br>வணிகம் – ரூ .2.00 | குடியிருப்பு – ரூ. 2.00<br>வணிகம் – ரூ 4.00 |

இந்நகராட்சியில் தற்போது வசூல் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்திய கட்டண விகிதங்கள் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ எண். | இனங்கள் | உத்தேச கட்டண விபரம் ( மூன்று வருடங்களுக்கு) |
|---|---|---|
| I | **உரிமக்கட்டணம்** | |
| 1. | கட்டிடம் கட்டுதல் 200 சதுர அடிக்கு | ரூ. 200/– |
| 2. | கழிவறை ஒன்றிற்கு | ரூ.100/– |
| 3. | கட்டிடம் கட்டும் இடம் மேற்பார்வைக் கட்டணம். | ரூ. 200/– |
| 4. | செப்டிக் டேங்க் | ரூ.100/– |
| 5. | கிணறு ஒன்றிற்கு | ரூ.100/– |
| 6. | மதில் சுவர் | 1 மீட்டருக்கு ரூ.10/–வீதம் |
| 7. | அபராதக்கட்டணம் | ரூ.500/– |
| 8. | கட்டிடம் கட்டும் இடம் அங்கீகாரம்<br>a).1 ஏர் வரை<br>b).2 ஏர் முதல் 4 ஏர் வரை | <br>ரூ .100/–<br>ரூ. 200/– |
| II | **அபிவிருத்திக் கட்டணம்** | |
| 1. | கட்டிடம் கட்டுதல்<br>கட்டிடம் –1 சதுர மீட்டருக்கு<br>(குடியிருப்பு & வணிகம்) | குடியிருப்பு – ரூ. 2.50<br>வணிகம் – ரூ. 5.00 |
| 2. | கட்டிடம் கட்டும் மனை<br>1 சதுர மீட்டருக்கு<br>(குடியிருப்பு & வணிகம்) | குடியிருப்பு – ரூ. 1.00<br>வணிகம் – ரூ. 2.00 |

**அ.குறிப்பு :**தற்போது உள்ள கட்டணங்கள் பத்து வருடங்களுக்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்டதாகும். நகராட்சியின் நிதிநிலைமையை மேம்படுத்தவும், பொது மக்களுக்கான பணிகளை தொய்வின்றி செய்யவும் புதிய கட்டண விகிதங்களை மன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.tpi/811/2011)

**தீர்மானம் எண்.1692 ஒத்திவைக்கப்பட்டது.**

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் 2010–11 ஆம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

## 2010–2011–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் மேலாண்மையும்

**1. ஆட்சி அமைப்பு (Jurisdiction)**

குளச்சல் நகராட்சி திருவிதாங்கூர் கொச்சி மாகாணத்தில் இருந்த போது 1920–ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை நிலை எண்.85 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 22.8.1998–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் அரசாணை நிலை எண்.238 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 02.12.2008–ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

முதல்நிலை நகராட்சியில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3141/2007/OP நாள் 07.10.2008– ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொதுப் பிரிவில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் அலுவலர் வகுப்பு – IV | 1 | – | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு – IV ) | 1 | – | 1 |
| 3 | உதவி கணக்கர் (வகுப்பு – V ) | 1 | – | 1 |
| 4 | உதவியாளர் (வகுப்பு – IV ) | 2 | – | 2 |
| 5 | இளநிலை உதவியாளர் (வகுப்பு – VII ) | 8 | 3 | 5 |
| 6 | காசாளர் (வகுப்பு – VII ) | 1 | – | 1 |
| 7 | தட்டச்சர் (வகுப்பு – VII ) | 2 | 1 | 1 |
| 8 | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு – V ) | 1 | – | 1 |
| 9 | வருவாய் உதவியாளர் (வகுப்பு – VII ) | 4 | 3 | 1 |
| 10 | பொருள் காப்பாளர் (வகுப்பு – V ) (Store Keeper) | 1 | – | 1 |
| 11 | ஆவண எழுத்தர் | 1 | – | 1 |
| 12 | அலுவலக உதவியாளர் | 7 | 1 | 6 |
| 13 | உதவி திட்ட அமைப்பாளர் (கணனி) | 1 | – | 1 |
| 14 | புள்ளி விவர குறிப்பாளர் | 2 | 1 | 1 |
| 15 | அலுவலக இரவு காவலர் | 1 | – | 1 |
| 16 | ஓட்டுநர் | 6 | 3 | 3 |

**பொறியாளர் பிரிவில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள்**

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர் நிலை – 2 | 1 | நகராட்சிபொறியாளர் நிலை 3 | நிலையினை உயர்த்தப்பட வேண்டும்.1 |
| 2 | உ.பொ / இ.நி.பொ. | 2 | – | 2 |
| 3 | பணி ஆய்வர் | 3 | – | 3 |
| 4 | குழாய் ஆய்வர் | 2 | – | 2 |
| 5 | மின்பணியாளர் நிலை–2 | 2 | 1 | 1 |
| 6 | துலக்குநர் | 5 | – | 5 |
| 7 | மீட்டர் ரீடர் | 2 | – | 2 |
| 8 | குழாய் பொருத்துநர் நிலை– 2 | 2 | – | 2 |
| 9 | குழாய் திறப்பாளர் | 2 | – | 2 |
| 10 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் | 5 | – | 5 |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | மின்கம்பியாளர் | 2 | 1 | 1 |
| 12 | மின்கம்பி உதவியாளர் | 2 | 1 | 1 |

குளச்சல் நகராட்சியின் பரப்பளவு 5.18 சதுர கி.மீ.. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23787 ஆகும். இதில் ஆண்கள் 11996, பெண்கள் 11791. மொத்த மக்கள் தொகையில் எஸ்.சி./எஸ்.டி. வகுப்பினர் எண்ணிக்கை 602 (ஆண்கள் 293, பெண்கள் 309) 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23155 ஆகும். இதில் ஆண்கள் 11770, பெண்கள் 11385.

## 2. பணி அமைப்பு (Personal )

### அ. மன்றம்

இந்நகராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 8 வார்டுகளில் 1 வார்டு எஸ்.சி. பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 16 வார்டுகள் பொதுவானவையாகும்.

பொது – வார்டு எண். 3, 4, 5, 7, 8, 9, 10, 11, 12, 14, 15, 17, 18, 20, 21, 22

பெண்கள் (பொது ) – வார்டு எண். 1, 2, 6, 13, 16, 19, 24

பெண்கள் (S.C.) – வார்டு எண். 23

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வருகின்றது. திரு.ஜே.ஜேசையா அவர்கள் நகர்மன்றத் தலைவராகவும், திருமதி.ஏ.ற்றி.லதா அவர்கள் நகர்மன்ற துணைத் தலைவராகவும் உள்ளனர். மொத்தம் 24 உறுப்பினர்கள் உள்ளனர்.

| வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| 15 | திரு. ஜேசையா .ஜே. நகர்மன்ற தலைவர் |
| 2 | திருமதி. லதா .எ.ற்றி. நகர்மன்ற துணைத்தலைவர் |
| **நகர்மன்ற உறுப்பினர்கள்** | |
| 1 | திருமதி. மேரி அல்போன்சாள்.எம். |
| 3 | திரு. சுரேஷ் .மு. |
| 4 | திரு. நசீர் .அ. |
| 5 | திரு. மரிய ஜாண் .எ. |
| 6 | திருமதி. செலஸ்டீனம்மாள் .எ. |
| 7 | திரு. லியோன்ஸ் .எல். |
| 8 | திரு. பின்டோ .பி. |
| 9 | திரு. பிரான்சிஸ் அமலதாஸ் .ஜே. |

| | |
|---|---|
| 10 | திரு. ராஜன் .அ. |
| 11 | திரு. ஜாண்லோப்பஸ் .க. |
| 12 | திரு. ஏசுதாசன் .எஸ். |
| 13 | திருமதி. ஜாண்சி .ற்றி. |
| 14 | திரு. சூசைமரியான் .எஸ். |
| 16 | திருமதி. லூர்து மேரி .வி. |
| 17 | திரு. முருகன் .சி. |
| 18 | திரு. நசீம் .எம். |
| 19 | திருமதி. கோமளா .வி. |
| 20 | திரு. அப்துல் முனாப் .ற்றி. |
| 21 | திரு. நூறு முகம்மது .எம். |
| 22 | திரு. கலீல் ரஹமான் .எம்.எ.ஆர். |
| 23 | திருமதி. சீதை .எஸ். |
| 24 | திருமதி. ஷீலா ஜெயந்தி .எஸ். |

**ஆணையாளர்**

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் **01.04.2010** முதல் **31.03.2011** முடிய திரு.அ.சர்தார் ஆணையராக பணியாற்றியுள்ளார்.

## 3. தேர்தல்

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் தேர்தல் நடைபெறவில்லை.

## 4. நகர்மன்றக் கூட்டங்கள்

அறிக்கையாண்டில் நகர்மன்றக்கூட்டங்கள் முறையாகவும், சீராகவும் நடைபெற்றுள்ளது. அறிக்கையாண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டுள்ள பொருள்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **கூட்டத்தின் தன்மை** | **நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை** | **முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | 11 | 211 |
| அவசரக்கூட்டம் | 16 | 139 |
| சிறப்புக்கூட்டம் | 2 | 2 |

## 5. குழுக்கள்

வரிமேல் முறையீட்டுக்குழு, நியமனக்குழு மற்றும் ஒப்பந்தக்குழுக்களால் கீழ்கண்ட விவரப்படி பொருள்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன.

| குழுவின் பெயர் | **நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை** | **முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| வரிமேல்முறையீட்டுக்குழு | – | – |
| நியமனக்குழு | – | – |
| ஒப்பந்தக்குழு | – | – |

திரு.பிரான்சிஸ் அமலதாஸ் அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும், திரு.மரிய ஜாண் அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் இருந்தனர். திரு.ஜாண் லோப்பஸ், திருமதி ஜான்சி, திருமதி. சீதை, திருமதி. ஷீலா ஜெயந்தி ஆகியோர்கள் வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

**6. நிர்வாகம் (பொதுப்பிரிவு)**

அறிக்கையாண்டில் திரு.சிந்தாமதார் 12.01.2011 வரையிலும், திரு.கிருஷ்ணமூர்த்தி 13.01.2011 முதல் 17.02.2011 வரையிலும் மேலாளராக பணிபுரிந்துள்ளார்கள்.
பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம் கீழ்வருமாறு :

| | |
|---|---|
| மேலாளர் | 1 |
| இளநிலை உதவியாளர் | 2 – (காலியிடம் – 1) |
| தட்டச்சர் | 1 |
| அலுவலக உதவியாளர் | 1 |
| புள்ளிவிவர குறிப்பாளர் | 1 |
| வருவாய் உதவியாளர்கள் | 3 |

அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதியமாக ரூ.17,88,000/– செலவிடப்பட்டுள்ளது.

**ஆ. பொறியியல் பிரிவு**

**பணியாளர்கள் விவரம்**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(1) நகராட்சி பொறியாளர் நிலை–III - 1

(2) பொதுப்பணி மேற்பார்வையாளர் – 1

(3) மின்பணியாளர் நிலை –II -- 1

அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் உத்தேச செலவினம் ரூ. 7,39,200/–ஆகும்.

**சாலைகள், பாலங்கள் மற்றும் தோணி துறைகள்**

இந்நகராட்சிப் பகுதிக்குள் தேசிய நெடுஞ்சாலை எதுவும் இல்லை. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாலைகளின் மொத்த நீளம் **32.21** கி.மீ. இந்நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் **17.582** கி.மீ. சாலை பராமரிப்புக்கென தனியாக பணியாளர் யாரும் இல்லை. பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றன.

| வ.எண். | சாலையின் விவரம் | 31.3.2011–ன்படி |
|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலை | 11.31 கி.மீ. |
| 2. | கருந்தள சாலை | 17.39 கி.மீ. |
| 3. | ஜல்லி சாலை | 0.27 கி.மீ. |
| 4. | மண் சாலை | 3.24 கி.மீ |
| | **மொத்தம்** | **32.21 கி.மீ.** |

**(இ) தெருவிளக்கு**

தெருவிளக்கு பராமரிப்பில் கீழ்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

1. மின் கம்பியாளர் 1
2. மின்கம்பி உதவியாளர் 1

இத்தலைப்பின்கீழ் அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவினம் ரூ.3,55,800/– மின்விளக்கு உபகரணங்கள் வாங்க ரூ.2,06,806/– செலவு செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணமாக ரூ.37,22,360/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | விளக்குகள் விவரம் | 1.4.2010–ல் உள்ளபடி | நீக்கம் | சேர்க்கை | 31.3.2011–ல் உள்ளபடி |
|---|---|---|---|---|---|
| 1 | பாதரச விளக்கு | – | – | – | – |
| 2 | சோடியம் ஆவிவிளக்கு | **92** | – | – | **92** |
| 3 | **40 வால்ட் குழல் விளக்கு** | **1309** | – | 51 | **1360** |
| | **மற்றவை** | **9** | – | – | **9** |

அ) இந்நகராட்சிப் பகுதியில் பெரிய பாலங்கள் எதுவுமில்லை.

ஆ) அறிக்கை ஆண்டில் பெரிய பாலங்கள் எதுவும் கட்டப்படவில்லை

இ) இந்நகராட்சியில் பெரிஸ் ( **Ferries)** எதுவும் கட்டப்படவில்லை

உ) தங்கும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்

இந்நகராட்சியில் மேற்காணும் யாவும் பராமரிக்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரால் பயணிகள் விடுதி மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றது

**10. தளவாடச் சாமான்கள்**

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காக செலவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**11. தெருவிளக்குகள்**

இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## III. கல்வி

**12. கல்வி வரி**

நகராட்சி எல்கைக்குள் தனியாரால் 7 பள்ளிகளும், அரசினரால் 6 பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகராட்சியின் பராமரிப்பில் பள்ளிக் கட்டிடம் எதுவும் இல்லை.

13. மாணவர்கள் எண்ணிக்கையும் திறமையும் – கேள்வி எழவில்லை

14. பயிற்றுவிக்கும் பணியாளர்கள் – கேள்வி எழவில்லை

15. இடவசதியும் சாதனங்களும் – கேள்வி எழவில்லை

16. (1) ஆரம்பப்பள்ளி – கேள்வி எழவில்லை

(2) இடைநிலைக் கல்வி – கேள்வி எழவில்லை

**17. <u>பள்ளிகளின் எண்ணிக்கையும் வசதிகளும்</u>**

இந்நகராட்சியின் பராமரிப்பில் மேல்நிலைப் பள்ளிகளோ, உயர்நிலைப் பள்ளிகளோ எதுவும் இல்லை.
தனியாரால் 2 மேல்நிலைப் பள்ளிகளும், அரசால் 1 உயர் நிலைப் பள்ளியும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

18. கல்வித் திறமை கேள்வி எழவில்லை
19. பணியாளர்கள் கேள்வி எழவில்லை
20. இடவசதிகள் கேள்வி எழவில்லை
21. நிதி ஆதாரம் கேள்வி எழவில்லை

22. <u>சிறப்புப் பள்ளிகள்</u>

நகராட்சியால் சிறப்புப் பள்ளி அல்லது வாசக சாலை எதுவும் பராமரிக்கப்படவில்லை மாவட்ட நூலக ஆணைக் குழுவினரால் ஒரு பொது நூலகம் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தனியாரால் தனிப் பயிற்சி கல்லூரிகளும் (**Tutorial College**) குழந்தைகளுக்கு ஒரு கான்வென்ட் பள்ளியும் ஒரு அராபிக் கல்லூரியும் நடத்தப்பட்டு வருகின்றன.

<u>வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்</u>

வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**<u>புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்</u>**

இந்நகராட்சியில் கீழ்கண்ட 11 இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

1) சாஸ்தாங்கரை
2) செக்காலத்தெரு
3) அஞ்சாலிவிளை
4) களிமார்
5) கொட்டில்பாடு–1
6) கொட்டில்பாடு–2
7) மரமடி–1
8) மரமடி–2
9) துறைமுகத்தெரு–1
10) துறைமுகத்தெரு–2
11) துறைமுகத்தெரு–3

அறிக்கையாண்டில் 11 குழந்தைகள் நல மையங்கள் நகராட்சி சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

**<u>14) பள்ளி சத்துணவு மையங்கள்</u>**

பள்ளி சத்துணவு மையங்கள் எதுவும் நகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை.

## பொது சுகாதாரம்

### i) மருத்துவ நிவாரணம்

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.ஒரு அரசு மருத்துவமனையும் 10 தனியார் மருத்துவ மனைகளும் நகரில் செயல்பட்டு வருகின்றன.

### ii) அமைப்பும் பணியாளர்களும்

இந்நகராட்சியில் நகர்நல அலுவலர் பணியிடம் இல்லை.

**iii) சிறப்புத்திட்டம்** – எதுவுமில்லை.

(1) மருத்துவப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கல் – எதுவுமில்லை.

24) நோயாளிகள் – கேள்வி எழவில்லை

25) வசதிகள் – கேள்வி எழவில்லை

### 6) பொதுசுகாதாரப் பணியாளர்கள் விவரம்

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்கண்ட பணியிடங்கள் அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1) துப்புரவு அலுவலர் – 1
2) துப்புரவு ஆய்வாளர் – 1
3) துப்புரவு மேற்பார்வையாளர் – 4
4) துப்புரவு பணியாளர்கள் – 50 – (காலியிடம் – 4)
5) மகப்பேறு உதவியாளர் – 1
6) மகப்பேறு ஆயா – 1
7) ஓட்டுநர்கள் – 3
8) சமுதாய அமைப்பாளர் – 1

அறிக்கையாண்டில் பொது சுகாதாரப் பிரிவில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினம் ரூ. 79,91,400/– ஆகும்.

27) <u>மகப்பேறு நிவாரணம்</u>

இந்நகராட்சியில் மகப்பேறு உதவியாளர் ஒருவரும், ஒரு மகப்பேறு ஆயாவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

28) <u>பிறப்பு இறப்பு விபரம் 2010–2011</u>

| | | |
|---|---|---|
| இறப்புகளின் எண்ணிக்கை | – | 193 |
| பிறப்புகளின் எண்ணிக்கை | – | 679 |
| இறந்து பிறந்தவை | – | 5 |
| சிசு மரணம் | – | இல்லை |
| பேறுகால இறப்பு | – | இல்லை |

**2010–11–ல் தடுப்பு மருந்து போட்ட விவரம்**

| மருந்து | | தடுப்பு மருந்து போட்ட குழந்தைகள் |
|---|---|---|
| **Hepatits – B** | - | **1030** |
| T.T. | - | -- |
| D.P.T. | - | 1750 |
| Polio | - | 2730 |
| **B.C.G.** | - | **800** |
| **Measles** | - | **615** |

**29. சுகாதாரம்**

துப்புரவுப் பணிக்கு 4 மினி டிப்பர் லாரிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**அ) நகர் சுகாதாரம்**

இந்நகரில் மொத்தம் 6124 கட்டிடங்கள் உள்ளன. 90 சதவீதம் வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளன. குறைந்த செலவில் கழிப்பிடம் கட்டும் திட்டத்தின்கீழ் 80 வீடுகளுக்கு கழிப்பிடம் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு என உரக்கிடங்கு இல்லாத காரணத்தால் நகரில் சேரும் குப்பைகளை நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கொட்டப்பட்டு வருகிறது.

**ஆ) உணவு கலப்பட தடுப்புச் சட்டம்**

அறிக்கையாண்டில் திரு.பி.வீரமணி, துப்புரவு ஆய்வாளர் அவர்களால் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின்கீழ் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டது. அன்னார் 30.06.2011–ல் பணி இடமாற்றம் ஆனதால் தற்போது உணவு ஆய்வர் எவரும் பணிபுரியவில்லை.

இ) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமத்தின்கீழ் பெறப்பட்ட வருமானம் – .
D&O - ரூ. 48,171/– PFA - ரூ.2,595/–

ஈ) நகராட்சிப் பகுதியில் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட உள்ளாட்சி தினவிழா, அறிஞர் அண்ணா பிறந்த தினவிழா, தமிழர் திருநாள் ஆகிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

**30) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம்**

இந்நகராட்சிப் பகுதியில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள 17ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து கீழ்கண்ட இடங்களில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு கிருமி நாசினி கலந்து நகரில் எல்லா பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 17 ஆழ்குழாய் கிணறுகளில் 16ஆழ்குழாய் கிணறுகளில் 10 H,P. மோட்டார்களும், 1 ஆழ்துளைக் கிணறில் 5 H,P. மோட்டாரும் பொருத்தப்பட்டுள்ளன.

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் விவரம்**

| வ.எண். | அமைந்துள்ள இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | 2 லட்சம் |
| 2 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 3 | பொட்டல் பகுதி | 2 லட்சம் |
| 4 | நகராட்சி அலுவலகம் | 7 லட்சம் |
| 5 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 6 | பர்னட்டிவிளை | 0.60 லட்சம் |
| 7 | கொட்டில்பாடு | 0.30 லட்சம் |
| 8 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி | 0.60 லட்சம் |
| 9 | சிங்காரவேலன் காலனி | 0.30 லட்சம் |
| 10 | மாதாகாலனி | 3 லட்சம் |
| 11 | KSSS காலனி – 2 | 3 லட்சம் |

இந்நகராட்சியில் 145 பொதுக்குழாய்கள் உள்ளன. 3647 தனியார் வீட்டு குடிநீர் குழாய்கள் நகராட்சி மூலம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

**குடிநீர் கட்டணம்**

அறிக்கை ஆண்டில் குடிநீர் கணக்கு தலைப்பின்கீழ் வரவு ரூ. 53.70 லட்சம், செலவு ரூ.50.76 லட்சம்.

**31) கழிவுநீர் வடிகால்**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் எதுவும் இல்லை. மழைநீர் வடிகால் மூலம் கழிவுநீர் நகரின் மேற்கே பாம்பூரி வாய்க்காலில் கடலில் சேருமிடத்தில் கலக்கிறது. நகரில் உள்ள மழைநீர் வடிகால் நீளம் 27.05 கி. மீ.

**32) பொது நலமும் பாதுகாப்பும்**

அறிக்கையாண்டில் நாய்கள், பன்றிகள் எதுவும் அழிக்கப்படவில்லை,

**33) பொது** – இல்லை

**34) போக்குவரத்து** – இல்லை

(அ) தினசரிச் சந்தை, மீன் சந்தை, வதை சாலை, பேரூந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடம் போன்றவைகள் மூலம் கிடைத்த வருமான விவரம் பின்வருமாறு

| தினசரிச்சந்தை | மீன்சந்தை | வதைசாலை | பேரூந்து நிலையகட்டணம் | கட்டண கழிப்பிடம் |
|---|---|---|---|---|
| 5,03,055/– | 89,355/– | – | 1,80,749/. | 87,675/– |

(ஆ) தினசரிச் சந்தை ஒன்றும், மீன்சந்தை ஒன்றும், பேருந்து நிலையம் 1 –ம் கட்டணக் கழிப்பிடம் 1–ம் பேணப்பட்டு பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

(இ) வண்டிப்பேட்டை – இல்லை

**(எ) பேரூந்து நிலையம்**

சி – பிரிவு பேருந்து நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது. பேருந்து நிலையம் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சிக்கு ரூ. 1,80,749/.வருமானம் கிடைத்துள்ளது.

**(உ) வதை சாலை**

நகராட்சிக்கு சொந்தமான வதை சாலை இல்லை.

**(ஊ) தொழில் கூடங்கள்**

G.O.Ms.No. 192 HSUD Dept. நாள் 14.02.1991 –ன்படி உள்ள மாஸ்டர் பிளான் அமுலில் உள்ளது. 1939–ம் வருட தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 01.07.1966 முதல் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது.

**36) மரம் நடுதல் மற்றும் பூங்கா பராமரிப்பு**

அறிக்கையாண்டில் மரங்கள் எதுவும் நடப்படவில்லை.
நகராட்சிக்கு சொந்தமான பூங்கா எதுவுமில்லை.

**37) நில வளர்ச்சி**

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித்திட்டம்–I, II மற்றும் III ஆகியவை விளம்பரப்படுத்தப்பட உள்ளது.

**(ஆ) <u>நகரமைப்பு திட்டங்கள்</u>**
நகரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**(இ) <u>சாலை ஓரக்கடைகள்</u>** – இல்லை
**(ஈ) வரை கடப்புகள்** – அறிக்கையாண்டின் தொடக்கத்தில் 26 வரை கடப்புகள் காணப்பட்டன.
**(உ) இதர வருவாய் வரத்தக்க இனங்கள் –** இதர இனங்கள் எதுவுமில்லை.

## <u>பொது வருமானம்</u>

**<u>39) வருவாய் இனம்</u>**

இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

| <u>விவரம்</u> | <u>வரி</u> |
|---|---|
| 1) பொது வரியினங்கள் | 8% |
| 2) விளக்கு வரி | 8% |
| 3) தண்ணீர் வரி | 8% |

<u>சொத்துவரி சீராய்வு 01.04.2008</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குடியிருப்பு | – 12.5% | மண்டலம் | A | முக்கிய சாலைகள் | – 2.05 பைசா |
| வணிகம் | – 50% | | B | பிரதானசந்திப்பு சாலைகள் | – 1.05 பைசா |
| தொழில் நிறுவனம் | – 50% | | C | குடியிருப்பு பகுதிகள் | – 0.75 பைசா |
| | | | D | குடிசைப்பகுதி | – 0.50 பைசா |

**40) <u>கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு</u>**

அறிக்கையாண்டில் 186 கட்டிடங்களுக்கு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய வரிவிதிப்புகள் மூலம் நகராட்சி வருமானம் ரூ. 1,34,564/–

**41) <u>கேட்பு வசூல் நிலுவை</u>**

அறிக்கையாண்டில் வரியினம் மற்றும் வரியற்ற இனத்தின்கீழ் கேட்பு வசூல் நிலுவை விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| **இனம்** | **கேட்பு 2010–11** | **வசூல்** | **நிலுவை (ரூ.இலட்சத்தில்)** | **வசூல் விழுக்காடு** |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 86.11 | 55.32 | 30.79 | 64 % |
| தொழில்வரி | 6.05 | 5.48 | 4.09 | 57& |
| தண்ணீர் கட்டணம் | 33.55 | 24.78 | 8.77 | 74 % |
| வரியற்றயினம் | 30.39 | 20.42 | 9.97 | 67 % |

நூலகவரி சொத்துவரியில் 10 % என்ற கணக்கில் வசூலிக்கப்பட்டு வருகின்றது. தொழில் வரி புதிய அரசாணைப்படியும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.651 நாள் 23.08.2008–ன்படியும் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ரூ. 21,000/– வரை | இல்லை |
| ரூ. 21,001 முதல் ரூ. 30,000 வரை | ரூ. 94/– |
| ரூ.31,001 முதல் ரூ. 45,000 வரை | ரூ. 235/– |
| ரூ.45,001 முதல் ரூ. 60,000 வரை | ரூ. 469/– |
| ரூ.60,001 முதல் ரூ. 75,000 வரை | ரூ. 704/– |
| ரூ.75,001 முதல் அதற்கு மேல் | ரூ. 938/– |

**42) பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் (SJSRY)**

இந்நகராட்சியில் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் 01.10.1998 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. இதற்கான நிதி ஆதாரம் மத்திய அரசினரால் 75 சதவீதமும், மாநில அரசினரால் 25 சதவீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

2010–11–ம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்ட தொகை மற்றும் பயன்பெற்றவர்கள் விபரம்:

**2010–11:** இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அலகுகளுக்காக ஒதுக்கப்பட்ட மொத்த தொகை ரூ. 7,34,595/–

**நகர்ப்புற சுய வேலைவாய்ப்புத் திட்டம் (USEP) :**

தனிநபர் மானியக் கடன்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,29,825/– தனிபர்கள் 42 பயனாளிகள். இம்மானியத் தொகையுடன் கூடிய கடன் தொகையினை இந்தியன் வங்கியின் குளச்சல் கிளையின் மூலமாக பயனடைந்துள்ளனர்.

**நகர்ப்புற பெண்கள் சுய உதவித் திட்டம் (UWSP)** :

ஒதுக்கப்பட்ட மானியத் தொகை ரூ.97,369/– இதனை பெண்கள் சய உதவிக் குழுக்களுக்கு வங்கி மூலமாக கடன் வழங்கப்பட்டது.

**நகர்ப்புற பெண்கள் சுய உதவித் திட்டம் (UWSP - RF)** :

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.32,456/– இதனை இந்நகராட்சியின்கீழ் இயங்கிவரும் குழுக்களுக்கு சுழல் நிதியாக வழங்கப்பட்டது

**நகப்புற ஏழைகளுக்கான வேலைவாய்ப்பு அதிகரிக்கும் திறன் வளர்க்கும் பயிற்சி (Step up) :**

ஒதுக்கப்பட்ட தொகை ரூ.1,94,738/– இந்நிதியினை இந்நகராட்சிக்குட்பட்ட வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் பயனாளிகள் 23 நபர்களுக்கு (1) MS Office & Tally, (2) Hardware & Networking (3) Desk top Publishing (4) Cell phone Service ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளித்த வகையில், சி.எஸ்.சி கம்யூட்டர் எஜுகேசன் (பி) லிமிடெட் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டது.

**நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் (UWEP) :**

ஒதுக்கப்பட்ட நிதி தொகையான ரூ. 1,58,845/– இதனை இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15–ல், மாதா காலனியின் வடக்குத் தெருவில் – மழை நீர் வடிகால் ஓடையுடன் கூடிய சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டது.

**நகர்ப்புற சமுதாய முன்னேற்ற கட்டமைப்பு (UCDN)** :

ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 64,193/– இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள குழுக்களுக்கு மதுரை, திருமங்கலம் குட்றோப் நிறுவனத்தினரின் மூலமாக பல்வேறு திறன் பயிற்சி வழங்கப்பட்டது.

**அலுவலக மற்றும் இதர செலவினங்கள் (A&OE)** :

ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 35,280/– அலுவலகத்திற்கு பீரோ மற்றும் வளர்ச்சிப் பணிக்கு செலவழிக்கப்பட்டது.

**தகவல், கல்வி மற்றும் தொடர்பு (I.E.C.)** :

ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 21,168/– தகவல் மற்றும் தொடர்பு போன்ற செலவினங்களுக்கு செலவழிக்கப்பட்டது.

.

**43) மருத்துவர் முத்துலட்சுமி M.G.R. மகப்பேறு உதவித்தொகை திட்டம்**

2010–11 –ம் ஆண்டுக்கு 6,98,000/– ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 100 பயனாளிகளுக்கு ரூ. 6000/– வீதம் வழங்கப்பட்டது. மீதி ரூ. 98,000/– இனிவரும் விண்ணப்பதாரர்களுக்கு வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**44) பொது**

இந்நகராட்சியின் பொது நிதி உட்பட பல்வேறு தலைப்புகளின்கீழ் நடைபெற்ற பணிகள் விவரம் 2010–2011–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

**COLACHEL MUNICIPALITY**

| | **M.L.A. Fund 2010-11** | |
|---|---|---|
| Sl.No. | Name of work | Estimate cost (in lakh) |
| 1 | Construction of SWD at Kamarajar Salai | 5.00 |
| 2 | Providing C.C.Pavement and Construction of SWD at Asad Street. | 3.00 |
| 3 | Construction of Auditorium near Anna Statue in Colachel Municipality | 2.00 |
| 4 | Construction of Bus Shelter near Simon Colony Bridge in Colachel Municipality | 2.00 |
| 5 | Construction of Noon Meal Centre at KSSS Colony. | 2.50 |
| | **M.P.Fund - 2010-11** | |
| 1 | Construction of Fisherman Resting Shed at Kottilpadu near Old R.C. Church in Colachel Municipality | 2.50 |
| 2 | Construction of Library Building at Port Street in Colachel Municipality. | 1.75 |
| 3 | Construction of Multipurpose Building at Periyapalli street near ARS Ration Shop in Colachel Municipality. | 2.50 |
| | **Flood Work 2010-11** | |
| 1 | Providing advanced patches with BT surface at Palli Road in Colachel Municipality | 4.25 |
| | **SJSRY 2010-11** | |
| 1 | Providing CC Pavement with SWD at Matha Colony North street | 1.60 |
| | **O&M Gap Filling Fund - 2010-11** | |
| 1 | Providing CC Pavement within Colachel Bus Stand in Colachel Municipality | 27.68 |

## GENERAL FUND 2010-11

| **Sl.No.** | **Name of work** | **Estimate amount** |
|---|---|---|
| 1 | Construction of SWD at Panthavilai Main Road. | 700000.00 |
| 2 | Supply & Delivery of Construction Materials for Construction of SWD with C.C.Pavement of Yesudhas Colony. | 82500.00 |
| 3 | Linking the Cheempilivilai Bore Well No:12 live with KSSS Colony Pumbing Main. | 20000.00 |
| 4 | Check Removing the Block in Kamarajar Salai Pipeline | 14000.00 |
| 5 | Maintance and Rectification of Repairs the Pipeline at Municipality road | 15000.00 |
| 6 | Attending Pipeline Leakage at ArmugaLodge near Govt.hospital,near SH Stone , MGR Street | 30000.00 |
| 7 | Removal Maintance of Sanitary Works Quarters at Palathankarai | 230000.00 |
| 8 | Interlinking Pipelines and Providing Sluice Value at Sinkaravelon Colony | 20000.00 |

| | | |
|---|---|---|
| 9 | Providing Welcome Boards in the Enterence of the Municipal Limit. | 30000.00 |
| 10 | Drilling of Borewell,Pumpset,Construction of Pannel room and Providing Pumping Main at near Vellipilliyar Temple | 250000.00 |
| 11 | Attending Pipeline Leakage at Beach Junction near OHT and Singaravelon Colony | 8500.00 |
| 12 | Attending Rectification of the Waste Water Mixing in to Pipeline at Elappavilai | 11000.00 |
| 13 | Providing & Extension of Pipeline Work at Yesudhas Colony | 53000.00 |
| 14 | Construction of SWD at Checkalatheru | 8500.00 |
| 15 | Supply & Delivery and Fixing of Domestic Mineral Water Filteration Plant with Cooler Model WAMAX and Capacity 50LPH at Bus Stand. | 50000.00 |
| 16 | Supply & Fabrication and Fixing of 12'x3' Size Tamil Vazhga Neoon Board | 21000.00 |
| 17 | Supply & Fitting a New HOPE tank at Municipal Office | 15000.00 |
| 18 | Supply and Fixing of 7Nos Ceiling Fan and Maintance of 62-A Main Switch | 25000.00 |
| 19 | Maintance of Motors in Colachel Municipality. | 41000.00 |
| 20 | Rectification of Repair and Maintance of Pipeline | 82000.00 |
| 21 | Providing Pipeline & Maintance of Pipeline | 73000.00 |
| 22 | providing Flex Board in Garbage Free Colachel Town in Colachel Municipality. | 16250.00 |
| 23 | Construction of SWD at Mathacolony | 1000000.00 |
| 24 | Construction of SWD at Kavadi Vilai | 600000.00 |
| 25 | Construction of SWD at Kamarajar Salai | 525000.00 |
| 26 | Construction of Retaining Wall and C.C. Road at palathankarai | 500000.00 |
| 27 | Providing 63mm PVC Pipeline from Colachel Municipal Area Kamarajar Salai Orient School to West Side Narrikal Junction | 36000.00 |
| 28 | Construction of Compound Wall & dismantling the Public Toiletat Dr.Ambethkar Daily Market | 60000.00 |
| 29 | Construction of Value Pit at Municipal Areas | 120000.00 |
| 30 | Construction of SWD at Asath Street. | 30000.00 |
| 31 | Supply & Deliveryof Construction Materials for Construction of SWD with Cement Concrete Pavement at Mathacolony. | 100300.00 |
| 32 | Providing New 100mm Sluice Value at Elappavilai and repacing the 100mm Sluice Value near Mathacolony Transformer | 15400.00 |
| 33 | Rectification of Repair the 10HP Submersible Pumpset and Pannel Board at Borewell No :II | 15700.00 |
| 34 | Linking the Old OHT line withNew OHT at KSSS Colony and Repair work at 140mm,110mm PVC Pipe at New OHT tank and D.No:4/76 | 14000.00 |

| | | |
|---|---|---|
| 35 | Suppying and fixing of Rolling Shutter & Floor Tiles and Electrical Arrangements at Auditoriumnear AnnaStatue | 90000.00 |
| 36 | Providing Retaining Wall and C.C.Pavement at Vellipillaiyar Kovil at Pottel Palathankarai Road One Portion | 150000.00 |
| 37 | Water Supply Pumpset,Pipeline,Pannel Board Maintance | 500000.00 |
| 38 | Supply & Delivery of Portable Fogging Machine | 95000.00 |
| 39 | Dismantling the Compound Wall in Port Street near OHT | 6500.00 |
| 40 | Providing C.C.Pavement with in Colachael BusStand | 2900000.00 |
